# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2017/2018

## சுற்றாடற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. (அ) இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் நிலைபேண் அபிவிருத்தி என்ற கருத்தேற்பின் முக்கியத்துவத்தை இலங்கை நீதித்துறை எந்தளவிற்கு அங்கீகரித்துள்ளது என்பதனை விளக்குக.

   (ஆ) சுற்றாடற் சட்டப்பரப்பில், முற்காப்புக் கோட்பாடானது எந்தளவிற்கு சட்டவாக்கத்திலும் வழக்குத் தீர்ப்புகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை விளக்குக.

2. தேசிய சுற்றாடற் சட்டத்திற்கான நீள்தலைப்பானது:

   "…சுற்றாடற் பாதுகாப்பிற்கும் முகாமைத்துவத்திற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்" என்கின்றது.

   தேசிய சுற்றாடற் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி இச் சட்டமானது இலங்கையின் சுற்றாடற் பாதுகாப்பிற்கும் முகாமைத்துவத்திற்கும் போதியளவிற்கு ஏற்பாடு செய்கின்றதா என ஆராய்க.

3. (அ) பொதுத் தொல்லை என்பது பொதுமக்களுக்கு தொந்தரவு, அசௌகரியம் மற்றும் இடைஞ்சல் இல்லாத பாதுகாப்பான சுற்றாடலொன்றை உறுதிப்படுத்துகின்ற குற்றத் தவறு ஒன்றாகும். சுற்றாடற் சட்டத்தின் பரிணாம வளர்ச்சியில் பொதுத் தொல்லை குறிப்பிடத்தக்க வகிபங்கு ஒன்றை வகித்தது. சுற்றாடற் சட்டத்தின் வளர்ச்சியின் ஆரம்ப நிலைகளில், பொதுத் தொல்லையானது வளி, நீர், மற்றும் மண் மற்றும் ஏனைய இயற்கை வளங்களைப் பாதுகாத்தது.

   மேலுள்ள கூற்று மீது நுணுக்கமாக கருத்துரை செய்க.

(ஆ) சில சந்தர்ப்பங்களில், பொதுத் தொல்லை வழக்கு நடவடிக்கைகள் கைத்தொழில் நடவடிக்கைகளின் செயற்பாட்டிற்கு சவால்களைத் தோற்றுவிக்கின்றன. சுற்றாடல் தீழ்ப்பை ஏற்படுத்துவதற்காக கைத்தொழிலாளர்கள் முன்வைக்கும் எதிர் வாதங்கள் நிலைபேண் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காகக் கவனமாகக் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பின்னணியில் விசேடமாக இயைபானது.

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

4. மனிதர்களின் பாதுகாப்பு என்பது மையக் கவனக்குவிப்பாக உள்ள நடைமுறையிலுள்ள மனித உரிமைகள் சட்டக் கட்டமைப்பினுள்ளே மனித உரிமைகள் மற்றும் சுற்றாடல் பற்றி நாம் தொடர்ந்து சிந்திக்க வேண்டுமா – உயிர் வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் ஆதனம் ஆகிய உரிமைகளைப் பசுமைப்படுத்தும் ஒன்றாகும் - அல்லது சுற்றாடல் உரிமைகள் பற்றி நேரடியாகப் பேசுவதற்கான காலம் வந்துவிட்டதா – மற்றொரு விதமாகச் சொல்வதானால் சுற்றாடல் தன்னளவிலேயே பாதுகாக்கப்படுவதற்கான உரிமையொன்று? மனித மையப்பட்டதனை சூழல் மையப்பட்டதாக நாம் மாற்றியமைத்தல் வேண்டுமா? Boyle A. (2012), "Human Rights and the Environment, Where Next?", *European Journal of International Law*, Volume 23, Issue 3, pp.613-642.

மேலுள்ள கூற்று மீதான உமது கருத்தை எழுதுக.

5. இலங்கையின் சுற்றாடற் தாக்க மதிப்பீட்டு நடபடிமுறையில் பல அம்சங்களை முன்னேற்றுவதற்கான இடமுள்ளது. நடைமுறையிலுள்ள சுற்றாடற் தாக்க மதிப்பீட்டு திட்டத்திலுள்ள குறைபாடுகளை அடையாளங்கண்டு ஆராய்வதுடன், இலங்கையில் சுற்றாடற் தாக்க மதிப்பீட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான விதந்துரைகளைச் செய்க. உமது ஆராய்வானது இலங்கை சட்டக் கட்டமைப்பினுள் சுற்றாடற் தாக்க மதிப்பீடு எந்தளவிற்கு நல்லாட்சியையும் ஜனநாயகக் கோட்பாடுகளையும் முன்னேற்றுகின்றது என்பதனைப் பிரதிபலிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

6. உமது விருப்பத் தேர்விலான ஏதேனும் மூன்று நாடுகளில் சுற்றாடல் பாதுகாப்பிற்கு நச்சுத் தீங்கியல் வழக்கு நடவடிக்கைகள் எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றன என ஆராய்க.

7. (அ) சர்வதேச பிரகடனங்களானவை மென்மையான சட்டமாகக் கருதப்படுவதுடன், அவை அரசுகளைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆயினும், சுற்றாடற் சட்டப் பரப்பிலுள்ள சர்வதேச பிரகடனங்களானவை சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு நீதித்துறையைத் தூண்டியுள்ளன.

இலங்கை அனுபவத்தின் பின்னணியில் மேலுள்ள கூற்று மீது பிரதிபலிப்புச் செய்க.

(ஆ) சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சர்வதேச தாபனமொன்று சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது பற்றிய கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது. "இலங்கை சுற்றாடற் சட்டப் பரப்பில் விசேடமாக நீர்ப்பறவைகளின் வாழிடமாக சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ள சதுப்பு நிலங்கள் பற்றிய சமவாயத்தின் கோட்பாடுகள்" என்பது மீது சமர்ப்பணமொன்றைச் செய்யுமாறு அத் தாபனம் உம்மை வேண்டியுள்ளது.

உமது சமர்ப்பணத்தில் நீர் உள்ளடக்கவுள்ள முக்கிய அம்சங்களை விளக்குக.

*****

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

## FACULTY OF LAW

## Bachelor of Laws Examination, Year IV, 2017/2018

### ENVIRONMENTAL LAW

(Three Hours)

Total Number of Questions: 07

Answer **any Four (04)** questions.
(Candidates will be penalized for illegible handwriting.)

1. (a) Explain the extent to which the judiciary of Sri Lanka has recognized the importance of the concept of sustainable development in the protection of natural resources.

   (b) Explain the extent to which the precautionary principle has been embodied in the legislation and cases in the field of environmental law.

2. The long title to the National Environmental Act provides:

   "An Act to ...make provision for protection and management of the environment and for matters connected therewith or incidental to."

   Discuss with reference to the provisions of the National Environmental Act whether the Act adequately provides for the protection and management of the environment of Sri Lanka.

3. (a) Public nuisance is a criminal offence that ensures a safer environment without annoyance, inconvenience, or discomfort to the general public. Public nuisance played a significant role in the evolution of environmental law. During the early stages of the development of environmental law, public nuisance safeguarded the air, water and soil and other natural resources.

   Critically comment on the above statement.

(b) At times, public nuisance actions pose challenges to the operation of industrial activities. The counter arguments put forward by the industrialists for causing environmental pollution should be considered carefully to ensure sustainable development. It is especially relevant in the context of developing countries.

Do you agree? Give reasons for your answer.

4. "Should we continue to think about human rights and the environment within the existing framework of human rights law in which the protection of humans is the central focus – essentially a greening of the right to life, private life, and property – or has the time come to talk directly about environmental rights- in other words a right to have the environment itself protected? Should we transcend the anthropocentric in favor of the eco-centric?" Boyle A. (2012), "Human Rights and the Environment, Where Next?", *European Journal of International Law*, Volume 23, Issue 3, pp.613-642

Write your opinion on the above statement.

5. There is a room for improvement of many aspects in the environmental impact assessment (EIA) procedure in Sri Lanka. Identify and discuss the drawbacks in the existing scheme of EIA and make recommendations to enhance the effectiveness of EIA in Sri Lanka. Your discussion should also reflect the extent to which EIA promotes good governance and democratic principles within the Sri Lankan legal framework.

6. Discuss the extent to which toxic tort actions contribute to the protection of the environment in any three countries of your choice.

7. (a) International declarations are considered as soft law, and they are not binding on states. However, international declarations in the field of environmental law have influenced the judiciary in making decisions for the protection of the environment.

Reflect on the above statement in the light of the Sri Lankan experience.

(b) An international organization actively involved in protection of wetlands has organized a seminar on protection of wetlands. The Organization has requested you to make a presentation on "Principles of the Convention on Wetlands of International Importance Especially as Waterfowl Habitat in the Environmental Legal Regime of Sri Lanka"

Explain the important aspects that you would include in your presentation.

*****